செய்தி வெளியீடு எண்.877 நாள்: 24.11.2009

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>"எரிவாயு சேமிப்பு மற்றும் எரிவாயுவை பாதுகாப்பாக பயன்படுத்துதல்" தொடர்பான விழிப்புணர்வு ஊர்தி – மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் துவக்கிவைத்தார்கள்.</u>

இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனம், எரிவாயு சேமிப்பு மற்றும் எரிவாயுவை பாதுகாப்பாக பயன்படுத்துவதற்கு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஊர்தி மூலமாக விழிப்புணர்வை எற்படுத்தி வருகிறது. மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (24.11.2009) மதியம் 1.30 மணிக்கு மேடவாக்கம் டேங்ரோட்டில், கீழ்பாக்கத்திலுள்ள கணேஷ் கேஸ் ஏஜேன்சி முன்பாக கொடி அசைத்து இவ்விழிப்புணர்வு ஊர்தியை துவக்கிவைத்தார்கள்.

இத்துவக்க விழாவில் இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனத்தின் துணை பொது மேலாளர் திரு. கே. இராதாகிருஷ்ணன், சென்னை முதன்மை மண்டல மேலாளர் திரு. எ. ஜேக்கப்பிரைன் ஆகியோர் பங்கு பெற்றனர்

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.